பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 29 | புதன்கிழமை | 15.11.2023 | அதிர்வு 106

## பருத்தித்துறை பிரதேச செயலாளராக எழிலரசி

(ந.லோகதயாளன்)

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் பருத்தித்துறை பிரதேச செயலாளராக இடமாற்றம் செய்யப்படுகின்றார்.

பருத்தித்துறை பிரதேச 04▶

## கை, கால் துண்டிக்கப்பட்ட நிலையில் பெண்ணின் சடலம்

### வவுனியாவில் பரபரப்பு; பொலிஸார் தீவிர விசாரணை



(கே.வசந்தரூபன்)

வவுனியா, தரணிக்குளம் – குறிசுட்ட குளம் பகுதியிலிருந்து நேற்று மாலை பெண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்று ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தரணிக்குளம் – குறிசுட்ட குளத்தின் நீரேந்துப் பகுதியில் நீரில் மிதந்த நிலையில் காணப்பட்ட அழுகிய நிலையிலுள்ள பெண்ணின் சடலம் தொடர்பாக அயலவர்களால் ஈச்சங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்துச் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டதுடன் அதனை மீட்டனர்.

அந்தச் சடலமானது 04▶

### வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைப் போல் கிரிக்கெட்டையும் கட்டியெழுப்ப முடியும்

## எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.கவுக்கே வெற்றி



### ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

கொழும்பு, நவம்பர் 15

“வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால் கிரிக்கெட்டையும் மீளக் கட்டியெழுப்ப முடியும். எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெறும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 06▶

### பலாங்கொடை மண்சரிவில் சிக்கிய

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் சடலங்களாக மீட்பு



(விரிவான செய்தி 14ஆம் பக்கத்தில்)

## 10,000 ரூபா கொடுப்பனவு “வரும்… ஆனால் வராது…”

### வடிவேல் பாணியில் கலாய்த்த சிறிதரன்



“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் நகைச்சுவை நடிகர் வடிவேலின் “வரும் ஆனால் வராது” என்ற நகைச்சுவைக்கு இணையானதாக உள்ளது.”

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் 06▶

## ஜனநாயக உரிமைகளை மீறுகின்றது ரணில் அரசு

### ஆஸி. தூதுவரிடம் சஜித் சுட்டிக்காட்டு



இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் போல் வெஸ்லி ஸ்டீபன்ஸ்க்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. 04▶



நவம்பர் 21ஆம் திகதி–வரும்செவ்வாய்க்கிழமை – சர்வதேச மீனவர் தினம்.

இலங்கையின் கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவனந்தா இருக்கும் நிலையில் இம்முறை சர்வதேச மீனவர் தினத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னரே இதற்கான முன்னாயத்தக் கூட்டம் கடற்றொழில் ராஜாங்க அமைச்சர் 06▶

# பல்கலைக்கழகப் பிரச்சினைகள் நாள்தோறும் தீவிரமடைகின்றன

## தேசிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



“நாட்டில் உள்ள 17 அரச பல்கலைக் கழகங்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். கல்வி கட்டமைப்பு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு ஏதும் வரவு – செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை.”

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் புரட்சிகரமானது என்று நிதி இராஜாங்க அமைச்சர் உட்பட ஆளும் தரப்பினர் புகழ்பாடுகின்றார்கள். புரட்சிகரமானது என்றால் என்னவென்பதை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டம் புரட்சிகரமானதல்ல, அது கனவு உலகத்தை அடிப்படையாகக் கொண்டது. புரட்சிகரமானது என்றால் சமூகக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். கனவு உலகு முன்மொழிவுகள் ஒருபோதும் மாற்றத்தை ஏற்படுத்தாது.

வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் கலாசாரம் தற்போது கடைப்பிடிக்கப் படுகின்றது. 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத் தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

கடந்த காலத் தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடும் ஜனாதிபதி முதலில் உண்மைத்தன்மையுடன் செயற்பட வேண்டும். தேசிய வளங்களை விற்கும் அரசின் தீர்மானத்தை எதிர்ப்பது பாரிய குற்றம் என்று ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பழமை வாய்ந்த நுவரெலியா தபாலகக் கட்டடத்தைப் பராமரிக்க முடியாத காரணத்தால் அதனைத் தனியார் மயப்படுத்தப்போவதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றார். அந்தத் தபாலகத்தை முறையாக நிர்வாகம் செய்யாதவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக தபாலகத்தைத் தனியார் மயப்படுத்துவது சிறந்த திட்டமாக அமையாது.

கல்வித் துறை தொடர்பில் கனவுலகில் இருந்து முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாடசாலைக் கல்விக் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்துள்ளால் உயர் கல்வி முறைமை பலவீனமடைந்துள்ளது.

நாட்டில் உள்ள 17 அரச பல்கலைக் கழகங்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள்.

கல்விக் கட்டமைப்பு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு ஏதும் முன்வைக்கப்படவில்லை. மாறாக புதிதாக 4 பல்கலைக்கழகங்களை அமைப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஊருக்கு ஊர் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதால் கல்விக் கட்டமைப்பு மேம்படாது.” – என்றார்.

# ‘குயின் எலிசபெத்’ சொகுசுக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை




“குயின் எலிசபெத்” என்ற சொகுசு கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கடந்த நான்கு நாள்களில் நாட்டுக்கு வருகைத்தந்த நான்காவது கப்பல் இது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“குயின் எலிசபெத்” கப்பலில் 1,930 பயணிகள் மற்றும் 953 பணியாளர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்

இந்த கப்பல் இலங்கையிலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

## ஜனநாயக உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது இலங்கையின் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

2024 ஆம் ஆண்டுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஆஸ்திரேலியத் தூதுவருக்கு எடுத்துரைத்தார்.

2023ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகளை உரிய முறையில் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலேயே 2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும், மக்கள் தரப்பில் இருந்து நோக்கும் போது இது பாதகமான வரவு – செலவுத் திட்டம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.



அத்துடன், தற்போதைய அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறித் தேர்தலைத் தொடர்ச்சியாக ஒத்திவைத்துள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர், ஆஸ்திரேலியத் தூதுவரிடம் எடுத்துரைத்தார்.

ஆஸ்திரேலியப் பிரதித் தூதுவர் திருமதி லலிதா கபூர், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன மற்றும் நிரோஷன் பெரேரா ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

## பருத்தித்துறைப் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளராகக் கடமையாற்றிய ஆழ்வாப்பிள்ளை சிறி இலங்கை நிர்வாக சேவையின் அதிவிசேட தரத்துக்குப் பதவி உயர்த்தப்பட்டு வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கு இடமாற்றலாகிச் சென்ற நிலையில் தற்போதைய நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகம் பருத்தித்துறை பிரதேச செயலாளராக நியமிக்கப்படுகின்றார்.

நல்லூர் பிரதேச செயலாளராகத் தற்போதைய சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமாரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகத் தற்போதைய கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாசினி மதியழகனும் நியமிக்கப்படுகின்றனர்.

இதேநேரம் கோப்பாய் பிரதேசத்தில் ஏற்படும் வெற்றிடத்துக்குத் தற்போதைய தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி நியமிக்கப்படுகின்றார். தெல்லிப்பளை பிரதேச செயலாளராகத் தற்போது திருகோணமலையில் பணியாற்றுபவர் கடமையேற்கவுள்ளார்.

## கை, கால் துண்டிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டு கைகளும், ஒரு காலும் இல்லாத நிலையில் உருக்குலைந்த நிலையில் காணப்படுகின்றது என்று பொலிஸார்





தெரிவித்தனர்.

இரு கைகளும், ஒரு காலும் வெட்டப்பட்டிருக்கலாம் என்று தடயவியல் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 26 வயதுக்கு உட்பட்டவராக இருக்கலாம் எனக் கருதப்படுவதுடன், சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## மரண அறிவித்தல்



### திரு.தங்கராஜா துரைராஜா
**(Formerly at Lawrie Muthu Krishna & Co., Colombo)**

உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்போது குமாரசாமி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா துரைராஜா அவர்கள் 10.11.2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, தங்கம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலராணியின் (Former Assistant General Manager, Bank of Ceylon) பாசமிகு கணவரும், கலாநிதி நிராஜ் (Associate Professor, Northumbria University, UK), கலாநிதி நிருஜா (Consultant, US) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராங் (Academic advisor), கலாநிதி பிரணவன் (Senior technical specialist) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிகையின் அன்புப் பேரனும் ஆவார்.

அருணகிரிராஜா (Former Deputy Director of Education), சுரேந்திரராஜா (Denmark) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமகள் (Former Teacher, Vembadi Girls' High School), அம்பிகா (Denmark), சிதம்பரநாதன் (F.C.A), செல்வராணி (US), சண்முகநாதன் (Germany), காலஞ்சென்ற திருச்செல்வநாதன், அனந்தராணி (Canada), சிவனேசநாதன் (UK), ஜீவராணி (UK), மதிவதனராணி (Canada), காலஞ்சென்ற தாமரைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.11.2023 புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**35/2,குமாரசாமி வீதி**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல் - குடும்பத்தினர்**
**T.P: - 021 222 1139**

# RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

| Approximately 463 M + From the World Population | Over 2 M Sri Lankans are Diabetes | Every 6 seconds One person dies due to Diabetes |
|---|---|---|



## Access to Diabetes Care

### *WELLNESS PACKAGE*

- *HBA1C*
- *Fasing/ Random Blood Sugar*
- *Total Cholesterol*
- *Creatinine & eGFR*
- *Blood Pressure*
- *BMI Assessment*
- *Consultation with Medical Officer*
- *Advice on Lifestyle Modification*

**Special Offer**

**Rs. 5,500/-**

**Offer valid till Dec 14th**

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பியல் நிஷாந்த தலைமையில் நடைபெற்றது. கடந்த செப்டம்பர் 18ஆம் திகதி நடந்த இந்த ஆயத்தக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும், இப்போது திட்டமிடப்பட்ட வகையில் அதை அடுத்த செவ்வாய்க்கிழமை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கடந்த வருடம் இந்த நிகழ்வு பேருவளையில் நடந்தது. இம்முறை யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அழைத்து, அவர் முன்னிலையில் சிறப்பாக நடத்த ஆயத்தங்கள் நடக்கின்றன.

ஆனால் நவம்பர் 21ஆம் திகதி வரவு – செலவுத் திட்ட விவாதம் சூடு பிடித்திருக்கும் சமயம், அவ்வேளையில் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள், எம்.பிக்கள் நாடாளுமன்ற விவகாரங்களில் தீவிர ஈடுபாடு காட்டியிருப்பர் என்பதால், சர்வதேச மீனவர் தினத்தை அதற்குரிய நவம்பர் 21 இல் அனுஷ்டிக்காமல், அது தொடர்பான கொண்டாட்டங்களை டிசம்பர் 15,16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலேயே நடத்த இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கடற்றொழிலில் வடக்கு மீனவர்களே அதிக நெருக்கடிகளை எதிர்கொள்கின்றமையால் அவர்களின் இடத்திலேயே இம்முறை இத்தினம் தேசிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் எனக் கடற்றொழில் அமைச்சு வட்டாரங்கள் கூறுகின்றன.

நல்லது. வடக்குக் கடற்றொழிலாளருக்குத்தான் பிரச்சினை அதிகம் என்பது உண்மைதான். அதுவும் இந்திய மீனவர்களின் அத்துமீறலால்தான் அது நடக்கின்றது என்பதும் தெரிந்த விடயம்.

ஆனால் அந்த விடயத்தை ஒட்டிய சர்வதேச மீனவர் தின நிகழ்வுகள் கூட ஜனாதிபதி மற்றும் கடற்றொழில் அமைச்சர், மேலும் இலங்கை அரசியல் பிரமுகர்களின் பிரசன்னத்துடன் யாழ்ப்பாணத்தில் இந்தியா நன்கொடையாகக் கட்டித் தந்த – இப்போதும் இந்தியாவின் யாழ் துணைத் தூதரகத்தின் நிர்வாகத்தில் இருக்கின்ற – கலாசார மண்டபத்தில் தான் நடைபெறப் போகின்றது.

என்னே இணக்கப்பாடு....!

மீனவ தினத்தை கொண்டாடும் அதே காலப்பகுதியில் யாழ் குருநகரில் கடற்றொழில் அமைச்சின் நடமாடும் சேவை மையம் ஒன்றும், மயிலிட்டியில் நடமாடும் மருத்துவ சேவையும் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

\+ + +

‘இலங்கைக் கிரிக்கெட்’ சர்ச்சையை ஒட்டிய ஒரு விடயத்தில் ‘நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்’ என்று ஓரிரு தினங்களுக்கு முன் இப்பத்தியில் வலியுறுத்தி இருந்தேன்.

இந்தச் சர்ச்சை ஒட்டி இடைக்காலத் தடையுத்தரவை விரைந்து வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசரின் பெயர் நாடாளுமன்றத்தில் பிய்த்து உதறப்பட்டமையால், நீதி நிலைநாட்டப்படும் நன்நோக்கில் இந்த விடயத்தை விசாரிக்கும் பொறுப்பிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் தாமாகவே விலகிக் கொள்வது உசிதமானது என்று கோடி காட்டியிருந்தேன்.

நேற்று இவ்விடயம் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன தாமாகவே இந்த விடயத்தை விசாரிப்பதிலிருந்து தாம் விலகிக் கொள்கின்றார் என அறிவித்திருக்கிறார்.

முன்னதாக, விளையாட்டுத்துறை அமைச்சரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இந்த விடயத்தை நீதியரசர் கருணாரத்ன விசாரிக்கின்றமை தொடர்பில் தமது தரப்பின் ஆட்சேபனையை முன் வைத்தார்.

அதனையும், தம்மைக் குறித்து நாடாளுமன்றத்தில் பாரபட்சமான முறையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் கவனத்தில் கொண்டு, இந்த விடயத்தை விசாரணை செய்யும் பொறுப்பில் இருந்து தாமாகவே விலகிக் கொள்கின்றார் என்று அவர் மன்றில் அறிவித்தார்.

வேறு நீதியரசுகள் இருவர் முன்னிலையில் இவ்விடயம் இனி எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

\+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைக் கூட்டம், ஒரு நாள் மட்டும் முன்னறிவிப்புடன், பல மூத்த உறுப்பினர்களுக்கு சரிவர அறிவிக்கப்படாத நிலையில், நேற்று முன்தினம் கூட்டப்பட்டமை தொடர்பில் இரண்டு நாள்கள் என் பத்தியில் சில தகவல்களை வெளியிட்டிருந்தேன்.

அந்தக் கூட்டத்தில் இனிவரும் காலத்துக்கான தலைவர், செயலாளருடன் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகின்றது.

கட்சியின் தேசிய மாநாடு நடக்க இருக்கையில், இதுவரை நீண்ட காலம் கூட்டமே கூட்டப்படாமல் இருந்துவிட்டு, இப்படித் திடுதிப்பென பல அங்கத்தவர்களுக்கு அறிவிக்காமல், உரிய முன்னறிவித்தல் கொடுக்காமல், புதிய ஆள்களைக் கூட்டி வந்து, கூட்டத்தைக் கூட்டி, புதிய நிர்வாகிகள் என ஓர் அணியினரை தெரிவு செய்தமை தவறு என்று தெரிவித்து கட்சித் தலைமைக்குக் கடிதம் எழுதியுள்ள சில மூத்த உறுப்பினர்கள், அதனை மீறி கட்சித் தலைமை இத்தெரிவுகளை முறையானதாக ஏற்றுக்கொண்டால், அதற்கு எதிராக நீதிமன்றுக்குப் போவது குறித்தும், தடை உத்தரவு பெறுவது குறித்தும், ஆலோசனை நடத்துகின்றனர் என்றும் தெரிய வருகிறது.

மலிந்தால் சந்தைக்கு வரும்தானே. அப்போது பார்க்கலாம்.

## 10, 000 ரூபா கொடுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத்திட்ட யோசனைகள் மற்றும் முன்மொழிவுகள் “வரும் ஆனால் வராது”” என்ற நகைச்சுவை வசனம் போலவே உள்ளது.

அதாவது அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஜனவரி மாதம் வரும் ஆனால் வராது. அடுத்த ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர்தான் அதனைப் பற்றி யோசிக்கலாம் என்று ஜனாதிபதி மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது நம்பிக்கை என்பது சரியாக சொல்லப்பட வேண்டும். இன்றைய (நேற்றைய) பத்திரிகைகளில் பார்த்தால் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு என்றுதான் உள்ளது.

ஆனால், அது ஜனவரி முதல் என்று சொல்லப்பட்டாலும் 2024 ஏப்ரல் மாதத்துக்குப் பிறகுதான் பெற முடியும். இந்த இடைப்பட்ட காலத்துக்குள் எதுவும் நடக்கலாம். நாடாளுமன்றத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் கூட நடக்கலாம்.

எனவே, இவ்வாறான ஏமாற்று நடவடிக்கைகள் அரசிடம் இருக்கும் வரைக்கும் அரசால் சரியானதொரு பாதையைத் தெரிவு செய்ய முடியாது.

அரச ஊழியர்களையும் சரியான பாதைக்குக் கொண்டு செல்ல முடியாது. கடந்த காலங்களிலும் பல யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், எந்த முன்மொழிவுகளும் செயற்படுத்தப்படவில்லை. வருடாந்தம் வரவு – செலவுத் திட்டம் என்ற ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது” – என்றார்.

## எதிர்வரும் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் குறித்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பணிப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

“இந்த நாட்டில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் வெற்றிப்பாதைக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால் கிரிக்கெட்டையும் மீளக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வருட வரவு – செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை மாற்றியமைக்கும் வரவு – செலவுத் திட்டமாகும்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் இலக்கை ஏற்கனவே நான் நெருங்கிவிட்டேன். அரசியல் நோக்கின்றி அந்த இலக்கை அடைய எதிர்பார்க்கின்றேன்.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெறும். எப்பொழுதும் மக்களுக்கு உண்மையைச் சொல்லும் கட்சியாக இருப்பதாலேயே ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் ரீதியான பின்னடைவுகளைச் சந்திக்கின்றது. இருப்பினும், மக்களுக்கு உண்மையைச் சொல்வதே ஐக்கிய தேசியக் கட்சியின் பலமாகும்.

எதிர்வரும் தேர்தலில் ஏனைய அரசியல் கட்சிகளும் போட்டியிடும். இருப்பினும் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதே எனது முதல் கடமையாகும். அதன் பின்னர் ஏனைய விடயங்களில் கவனம் செலுத்த முடியும்.” – என்றார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் 2024 வரவு – செலவுத் திட்டம் மற்றும் அதன் அடிப்படை குறித்து இங்கு நீண்ட விளக்கமளித்தனர்.

வெகுஜன ஊடக மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அரசியல் அபத்தம்

'என்ன சின்னப் பிள்ளைத்தனமாக இருக்கின்றதே?' என நடிகர் வடிவேலு பாணி 'கமெடி' ஒன்று நம் திரைப்பட உலகில் இருக்கின்றது. ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் எழுப்பியுள்ள ஒரு வினா இந்தக் கமெடிக் கேள்வியைத்தான் நம் மனதில் கிளப்பியிருக்கின்றது.

முல்லைத்தீவு நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியமைக்காகப் போராட்டங்கள் செய்தவர்கள், அந்த நீதிபதி வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்திப் போராட்டங்கள் நடத்தினார்களா என அவர் கேள்வி எழுப்பி இருக்கின்றார்.

நீதிபதி வழங்கிய தீர்ப்பு - கட்டளை - என்ன என்று தெரியாமல் சிறுபிள்ளைத்தனமாக அவர் பேசுகின்றார் என்றே தோன்றுகின்றது. குருந்தூர் மலையில் புதிய கட்டமைப்புகளை அமைப்பதற்குத் தடை விதித்தே முல்லைத்தீவு நீதிபதி முதலில் உத்தரவிட்டார்.

அதுவும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் உட்பட பலர் பல ஆதாரங்களோடு தொடர்ந்து நீதிபதியின் முன்வைத்த சட்ட சமர்ப்பணங்கள் மற்றும் சட்டப் போராட்டங்கள், அரசு அதிகாரிகளின் கருத்து நிலைப்பாடுகள் போன்றவற்றை உள்வாங்கியே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

அந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்படாமல், அதையும் மீறி தமிழர் தாயகப் பகுதிகளை பௌத்த மயப்படுத்தும் கொடூரம் தொடர்ந்து அரங்கேறுவதாகப் போராட்டம் நடத்திக் கொண்டவர்கள், கொண்டிருப்பவர்கள், குரல் எழுப்புபவர்கள் ஸ்ரீரங்கேஸ்வரன் சார்ந்த ஈ.பி.டி.பியினர் அல்லர். மற்றைய தமிழ்த் தேசிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான்.

அது மாத்திரமல்ல, நீதிபதியின் உத்தரவை மீறி கட்டுமானங்கள் குருந்தூர்மலை பௌத்த விகாரையில் நடக்கின்றன என்ற ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, நீதிமன்ற உத்தரவு மீறப்படுகின்றது என்று சட்டப் போராட்டம் நடத்தியவர்களும் அதே ரவிகரன் போன்ற தரப்பினர்தான். இன்று அதைக் கொச்சையாக விமர்சிக்கும் ஈ.பி.டி.பியினர் அல்லர்.

அந்தச் சட்டப் போராட்டத்தின் பெறுபேறாகத்தான் தமது நீதிமன்ற உத்தரவை மீறி கட்டமைப்புகள் குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கட்டளையை நீதிபதி அடுத்து வழங்கினார். அந்தக் கட்டளையை வாபஸ் பெறச்சொல்லித்தான் நீதிபதி மிரட்டப்பட்டார் என்றும், அவர் நாட்டை விட்டு ஓடும் நிலைமை ஏற்பட்டது என்றும் விடயம் அம்பலமாகி உள்ளது.

அவரது கடைசி உத்தரவை நடைமுறைப்படுத்தச் சொல்லிக் கேட்பதற்கு ஒன்றும் இல்லை. அந்தக் கட்டளையின் அடிப்படையில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்துக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிட்டு நிவாரணம் பெறுவதும், குற்றமிழைத்தோரை தண்டிக்கக் கோருவதும்தான் உள்ள சட்ட வழிகள். அதைச் சட்டரீதியாகத் தொடர்வதற்கு இதே ரவிகரன் தரப்பு தயாராக இருந்தது. ஆனால் அதில் ஒரு சட்ட இடைஞ்சல் வந்தமை ஸ்ரீரங்கேஸ்வரனுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம்.

முல்லைத்தீவு நீதிபதியின் கடைசிக் கட்டளையை - அதாவது தமது உத்தரவை மீறி குருந்தூர்மலையில் கட்டுமானங்கள் நடைபெறுகின்றன என்ற கட்டளையை - ஆட்சேபித்து அதே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பல ரிட் மனுக்கள் சிங்களத் தரப்புகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றை விசாரித்து முடிக்க முன்னர், நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு அதே மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்த்தரப்புகளுக்கு நோட்டீஸ் அனுப்ப இணங்காது என்ற அடிப்படையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை ஆரம்பிக்க முடியாத நிலையில் தமிழர் தரப்புக் காத்திருக்கின்றது.

குருந்தூர்மலையில் புதிதாக எந்தக் கட்டமைப்பும் மேற்கொள்ளப்படக்கூடாது என்ற நீதிபதியின் மூல உத்தரவை நடைமுறைப்படுத்தக் கோரி தொடர்ந்து போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அவற்றையும் மீறி, இதே ஸ்ரீரங்கேஸ்வரன் தரப்பினர் இடம்பெற்றிருக்கும் பௌத்த - சிங்கள அரசு தனது அரசுக் கட்டமைப்புகள் மூலம் வேலைகளைச் செய்து கொண்டுதான் இருக்கின்றது. அதற்கு எதிராக ஒரு சொல் பேச முடியாத ஸ்ரீரங்கேஸ்வரனும் அவரது கட்சியினரும் இந்த விடயத்தில் அந்த மண்ணின் மைந்தர்களுக்கு எதிராக கொச்சைத்தனமாக குதர்க்கம் பேசுவது பெரும் அரசியல் அபத்தம். சிறுபிள்ளைத்தனம்.


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."

- சார்ள்ஸ் டார்வின்
(பரிணாமவியலின் தந்தை)



# பொருளாதாரச் சீரழிவுக்கு ராஜபக்ஷக்களே காரணம்

## உயர்நீதிமன்றத்தின் அதிரடித் தீர்ப்பை அறிக்கையாக வெளியிட்ட சஜித் அணி



கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட பிரதிவாதிகளின் தவறான பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்கள் காரணமாக மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

2019 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் எடுத்த தவறான பொருளாதார முகாமைத்துவ தீர்மானங்கள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய நீதிபதிகள் குழுவில் புவனேக அளுவிகாரே, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய நீதியரசர்கள் குழாமால் இந்தத் தீர்மானம் ஏகமனதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன் ஆகியோர் இந்த மனுவின் ஏனைய பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் வர்த்தகர்களுக்கு வழங்கிய 681 பில்லியன் ரூபா வரி நிவாரணம், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அதிக தாக்கம் செலுத்தியதாக மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியை 203 ரூபாவாகப் பேணியமை, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் அந்நிய செலாவணியில் பற்றாக்குறை நிலவிய போது 500 மில்லியன் டொலர் இறையாண்மை பிணை முறிகளை மீள செலுத்துவதற்கு எடுத்த தவறான பொருளாதார தீர்மானங்கள் இவற்றில் சிலவாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்த தேசிய அறிஞர்கள் பேரவையின் உறுப்பினர்களான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினருமான கலாநிதி மஹிம் மெண்டிஸ், பேராசிரியரும் கலாநிதி அதுல சிறி சமரகோண் மற்றும் பேராசிரியரும் கலாநிதி நீல் மொராயஸ் ஆகியோர் இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணையின் பின்னர் மனுதாரர்களுக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஐக்கிய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தலைமையிலான சட்டத்தரணிகளான விஷ்வ பீரிஸ், சந்தமல் ராஜபக்ஷ, சம்பத் விஜயவர்தன, எரங்க பெரேரா பிரமோத் பெரேரா ஆகிய சட்டத்தரணிகள் மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். - என்றுள்ளது.

## ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பு




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பு நடைபெற்றது.






# 2024 இல் 1.8 வீத பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதே அரசின் குறிக்கோள்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



2024 ஆம் ஆண்டினை பொருளாதார ரீதியில் வலுவான ஆண்டாக மாற்றிக்கொள்ள, 1.8 வீத பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதே அரசின் அடிப்படை இலக்காகும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அதேபோல், இம்முறை வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள், வறுமையான மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள், சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

“ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் சமர்ப்பித்த 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டமே மிகவும் சவால் மிக்க வரவு – செலவுத்திட்டமாகும். அதில் இருந்து நாம் பெற்றுக்கொண்ட நிலையான தன்மையை அடிப்படையாகக் கொண்டே, 2024 ஆம் ஆண்டுக்கான அரசின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், நாம் எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணிக்கவும் அவசியமான பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாம் முன்வைத்த 2023 ஆம் ஆண்டு முன்வைத்த வரவு – செலவுத்திட்டத்திற்கு அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு முன்வைத்த வரவு – செலவுத் திட்டத்திற்கு அடிப்படையாகக் கொண்ட விடயங்கள் குறித்தும் நாம் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டோம். ஆனால், 2023 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டமொன்றை முன்வைக்க முடியுமாகுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் காணப்பட்டது. அவ்வாறான சூழ்நிலையில், நாம் மேற்கொண்ட பணிகள் சிறப்பாக அமைந்ததன் காரணமாகவே முழுமையாக இல்லாவிட்டாலும் கூட நாம் இன்று குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதார ரீதியில் ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். இந்த ஸ்திரத்தன்மையைத் தாண்டிய ஒரு வரவு – செலவுத்திட்டமொன்று குறித்தே நாம் தற்போது கதைக்கின்றோம்.

2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத்திட்டத்தில், அரச வருமானம் 4 ஆயிரத்து 127 பில்லியன் ரூபாவாகவும் அரச செலவினங்கள் 6 ஆயிரத்து 978 பில்லியன் ரூபாவாகவும், வரவு – செலவுத்திட்டப் பற்றாக்குறை 2 ஆயிரத்து 851 பில்லியன் ரூபா என்ற பிரதான இலக்கங்களுடனேயே நாம் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றோம். இந்த வரவு – செலவுத்திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்த பிரதான விடயங்கள் குறித்து குறிப்பிடுவதாயின், நாம் எவ்வகையான இலக்குகளுடன் பயணிக்க வேண்டியிருக்கின்றது என்பது பற்றி இந்த வருடத்தின் எமது தேசிய கடன் மறுசீரமைப்பு நடடிக்கைகளின்போது நாம் தெளிவுபடுத்திய விடயங்கள் உங்களுக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கின்றேன்.

நூற்றுக்கு, நூற்றி இருபத்தி எட்டாக இருந்த கடன் சுமையை, நூற்றுக்கு தொன்னூற்றி ஐந்தாகக் குறைத்தல் மற்றும் 34.6 வீத நிதித் தேவையை 13 வீதம் வரை குறைத்தல், வெளிநாட்டு கடன் நிதியை இன்று நிலவும் 9.4 வீதத்தில் இருந்து 4.5 வீதம் வரை குறைத்தல் போன்ற 3 காரணங்களின் அடிப்படையிலேயே 2023 மற்றும் 2024 வரவு – செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த இலக்கங்களை அடைந்துகொள்ளவே, சவால் மிக்க இக்காலப்பகுதியில் நாம் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கின்றோம்.

மேலும், 2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத்திட்டத்தில், இந்தப் பொருளாதார நெருக்கடியின்போது, அவதானம் செலுத்தப்பட வேண்டிய மற்றும் கடந்த காலங்களில் அனைவரும் கருத்துத் தெரிவித்த அனைத்துத் துறைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி, அவர்களை மீண்டும் கட்டியெழுப்ப அவசியமான பொருளாதார உந்துதலை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். 2024 ஆம் ஆண்டினை பொருளாதார ரீதியில் வலுவான ஆண்டாக மாற்றிக்கொள்ள, 1.8 வீத பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதே அரசின் அடிப்படை நோக்கமாகும்.

இதன்போது, எமது கடன் மறுசீரமைப்பு மிக முக்கியமாகும். கடன் மறுசீரமைப்பு இன்றி கடன் நிலைபேற்றுத் தன்மையை இந்நாட்டில் ஏற்படுத்த முடியாது. நாம் அதனை நோக்கிப் பயணிக்க உள்நாட்டு கடன் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்தோம். அதன் பின்னர் வெளிநாட்டு இருதரப்பு கடன் மறுசீரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். அதற்காக எமக்கு சர்வதேச கடன் வழங்குனர்கள் ஆதரவு வழங்கி வருகின்றார்கள்.

இந்த வருட இறுதிக்குள் எமது கடன் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்து, நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, எமக்கு மீண்டும் இயல்பான பொருளாதார நடவடிக்கைகளை தொடரக் கூடிய சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்த முடியும். அதற்காக வெற்றிகரமான பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம்.

நாம் 2024 ஆம் ஆண்டு வரவு – செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம்.

அவர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தோம். அதேபோன்று அஸ்வெசும பயனாளர்கள், சிறுநீரக நோயாளிகள், முதியோர் மற்றும் அங்கவீனர்கள் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளோம்.

அதேபோன்று, சிறிய மற்றும் மத்திய தர தொழில் முயற்சியாளர்கள் குறித்தும் அவதானம் செலுத்தியுள்ளோம்.

இதற்காக 30 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், காணி உரிமை மற்றும் தொடர்மாடிக் குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு அதன் உரிமையை வழங்குவது தொடர்பிலும் ஜனாதிபதி இந்த வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழிந்துள்ளார். கல்வி மறுசீரமைப்பு உட்பட பல்வேறு மறுசீரமைப்புப் பணிகள் குறித்தும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. கடன் பெறும் வரையரை அதிகரிக்கப்பட்டிருப்பது, மேலதிக கடன் பெறுவதற்கு அன்றி கடன் மறுசீரமைப்பு பணிகளின்போது எமக்கு அவசியமான நிதி நிலைகளை பேணிக்கொள்வதற்காகும். அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி அவசியமாகும்.

குறிப்பாக, இந்த நடவடிக்கைகளின் மூலம் 2024 ஆம் ஆண்டை பலமான பொருளாதார ஆண்டாக மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும். பொருளாதார நடவடிக்கைகளை இயல்பாக மேற்கொள்ள ஆரம்பிக்கும் வருடமாக, 2024 ஆம் ஆண்டு அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.” – என்றார்.



# முல்லை தண்ணிமுறிப்புக்குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.15

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறுப்பற்ற செயலினால் முல்லைத்தீவு மாவட்டத்தின்

தண்ணிமுறிப்புக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்களால் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்புக்குளத்தின் அபிவிருத்தி என்னும் பெயரில் குளத்தின் பாதுகாப்பிற்கு போடப்பட்டிருந்த அலை கற்கள் அகற்றப்பட்டமையினால் குளம் உடைக்கும் அபாயம் இப்போது ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குளத்தின் புனரமைப்புப் பணியை நீர்ப்பாசனத் திணைக்களம் ஒக்டோபர் மாதம் ஓர் ஒப்பந்தகார நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. அந்த ஒப்பந்தத்தைப் பெற்றவர் மாத இறுதிப் பகுதியில் அலை கரையில் போடப்பட்டிருந்த அலை கற்களை அகற்றிய சமயம் குளக்கட்டில் பாரிய குழியை அவதானித்துப் புனரமைப்புப் பணியைத் தாமதித்துள்ளார்.

இந்த நிலைமையில் தற்போது தொடர் மழை நீடிப்பதனால் குளத்திற்கு அதிகளவு நீர் வரத்துக் காணப்படுகின்றது. நீர் அதிகமாக வருவதனால் குளக்கட்டு உடைக்கும் நிலையைத் தடுக்க விவசாயிகள் அனைவரும் மண் அணைப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது –

குளப் பணிக்கான அனுமதி ஜுன் மாதமே கிடைத்தது. அலை கற்களை அகற்றியதன் பின்பே முழுமையான சேதம் கண்டுகொள்ளப்பட்டது. இருந்த போதும் குளத்தை உடைக்காமல் பாதுகாக்க 16 அடி நீருடன் குளத்தைத் திறக்க வேண்டும். குளத்தின் மொத்தக் கொள்ளளவான 21 அடி நீர் தேக்கினால் ஆயிரத்து 800 ஏக்கர் நிலம் விவசாயம் செய்ய முடியும். 16 அடியுடன் நீரை வெளியேற்றினால் 40 வீதம் மட்டுமே சிறுபோகம் செய்ய முடியும். – என்றார்.

இது தொடர்பில் மாவட்ட அரச அதிபரான உமாமகேஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பில் எனக்கும் இன்று மாலையே (நேற்று) தகவல் கிடைத்தமையினால் அனர்த்த முகாமைத்துவப் பிரிவிற்கு தகவல் வழங்கி, உடன் சகல தரப்பையும் உள்ளடக்கிய கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# இரணைமடுக் குளத்திற்கு நீர் வரத்து மந்த நிலையே!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.15

வடக்கின் மிகப்பெரிய குளமான கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்தின் நீர் மட்டமானது நேற்றுடன் 18 அடியை அண்மித்துள்ளது.

வடக்கில் தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்ற போதும் இரணைமடுக் குளத்திற்கான நீர்வரத்து மந்த நிலையிலேயே உள்ளது.

36 அடி நீர் கொள்ளளவைக் கொண்ட இக்குளத்திற்கு இதுவரையான காலத்தில் நான்கில் ஒரு பங்கு நீரே கிடைத்துள்ளதாகவும், குளத்திற்கு முழுமையானளவு நீர் கிடைத்தாலே 2024 ஆம் ஆண்டின் சிறுபோகத்தையும் மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேநேரம் எதிர்வரும் வாரங்களில் அதிக மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதனால் குளத்திற்கான நீர் வரத்துக் கூடக் கூடும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.



# வவுனியாவில் 93 குளங்கள் நிரம்பி வான் பாய்கின்றன!

## 15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன



வவுனியாவில் 93 குளங்கள் வான் பாய்கின்றன.15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன என கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் 93 குளங்கள் வான் பாய்வதுடன், 15 குளங்கள்

தற்போது தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையினால், குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து 93 குளங்கள் வான் பாய்கின்றன. மேலும் பல குளங்கள் வான் பாயும் கட்டத்தை அடைந்துள்ளன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 15 குளங்கள் சிறு உடைப்பெடுத்த நிலையில் அவை தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வான் பாய்வதை அதிகளவான மக்கள் பார்வையிட்டு வருகின்றமையுடன் நீர்நிலைகளில் மீன்பிடித்தும் வருகின்றமைய்சியும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.










# சமூகப் பொருளாதாரப் புரட்சிக்கு பிரதமர் நரேந்திர மோடியே காரணம்

## - வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவிப்பு



கடந்த பத்த ஆண்டுகளில் இந்தியா அடைந்த சமூகப் பொருளாதாரப் புரட்சிக்கு பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையே காரணம் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உத்தியோகபூர்வ பயணமாக பிரித்தானியா சென்றுள்ளார்.

லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட தீபாவளி கொண் டாட்டத்தில் பங்கேற்ற அவர் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், பேட்டி பதாவோ – பேட்டி பச்சாவோ, ஜன்தன் யோஜனா, ஆவாஸ் யோஜனா, டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட்அப் இந்தியா மற்றும் ஸ்கில் இந்தியா போன்ற திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார்.

கடந்த பத்து ஆண்டுகளாக நீங்கள் கேள்விப்பட்ட இந்த திட்டங்களில்தான் நீண்ட பதில் அடங்கி உள்ளது. உலகம் மாறிவிட்டது, நமது உறவும் மாறிவிட்டது, பிரித்தானியா மாறிவிட்டது, இந்தியாவும் மாறிவிட்டது. இந்தியாவில் என்ன மாறிவிட்டது என்று நீங்கள் என்னிடம் கேட்கலாம். அதற்கு பதில் உங்களுக்குத் தெரியும். மோடிதான் அந்த பதிலும்கூட.

இந்தியாவும் பிரித்தானியாவும் ஓர் அன்பானதும், செழிப்பானதுமான உறவைப் பகிர்ந்து கொள்கின்றன. நாங்கள் இன்று இந்தியாவுக்கும் பிரித் தானியாவுக்கு இடையிலான உறவை மறுவடிவமைக்க முயற்சி செய்து வரு கிறோம்.

மோடி தலைமையிலான அரசு 10 ஆண்டுகளை நிறைவு செய்யவிருக்கிறது. கடந்த 65 ஆண்டுகளில் உருவாக்கிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூ ரிகளுக்கு இணையாக கடந்த பத்து ஆண்டுகளில் புதிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளை கட்டியுள்ளோம்.

கடந்த பத்த ஆண்டுகளில் இந்தியா அடைந்த சமூகப் பொருளாதாரப் புரட்சிக்கு பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையே காரணம். தேசத்தின் பாதையை வடிவமைப்பதில் பிரதமர் மோடி முக்கிய பங்காற்றினார் என்று தெரிவித்துள்ளார்.

# சென்னையில் கனமழை முன்னெச்சரிக்கை: இன்று பாடசாலைகளுக்கு விடுமுறை!



கனமழை முன்னெச்சரிக்கை நட வடிக்கையாக சென்னையில் உள்ள பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர் கனமழையால் ஏற்கெனவே புதுச்சேரி, காரைக்காலில் இன்று பாட சாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இன்றும் சில இடங்களில் மிதமான மழையும், சில இடங்களில் பலத்த மழையும் பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் மாலை முதல் சென்னையின் பல்வேறு பகுதி களில் விட்டுவிட்டு கனமழை பெய்து வருகிறது. மயிலாப்பூர், மந்தைவெளி, பட்டினப்பாக்கம், எம்.ஆர்.சி. நகர், அடையாறு, வேளச்சேரி, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், தேனாம்பேட்டை, அண்ணா நகர், ராயப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் விட்டுவிட்டு கனமழை பெய்து வருகிறது.

சென்னையில் நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் நேற்று மாலை 6 மணிவரை 4.6 சென்ரி மீற்றர் மழை பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக சோழிங்கநல்லூரில் 7.29 சென்ரி மீற்றர் மழை பதிவாகி உள்ளது.

இன்றும் கனமழை பெய்யும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத் துள்ளது. இதையடுத்து கனமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னையில் உள்ள பாடசாலைகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, சென்னை, செங்கல் பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணா மலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் தொடர்ந்தும் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

# 1,000 பேரை பணயக் கைதிகளாக்கிய ஹமாஸின் முக்கிய தளபதி உயிரிழப்பு



ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதியான அகமது சியாம் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் பாதுகாப்பு படை அறிவித்துள்ளது.

இவர், 1,000 பேரை பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

இஸ்ரேல் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஹமாஸ் அமைப்பின் முக்கிய மூத்த தளபதிகளில் ஒருவரான அகமது சியாம் இஸ்ரேல் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இவர், ராண்டிசி மருத்துவமனையில் நோயாளிகள் உள்ளிட்ட 1,000-க்கும் மேற்பட்டோரை பணயக் கைதிகளாக சிறைப்பிடித்திருந்தார். காசா மக்கள் தெற்கு நோக்கி வெளியேற விடாமல் தடுத்ததில் அகமது சியாமுக்கு முக்கிய பங்கு உண்டு.

மேலும், சுரங்கப் பாதையில் பயங்கரமான ஆயுதங்களையும் அவர் மறைத்து வைத்திருந்தார்.

அகமது சியாம் ஹமாஸின் நாசர் ரத்வான் கம்பெனி படைப்பிரிவின் தளபதியாக செயல்பட்டு வந்தவர். காசாவில் பொதுமக்களை மனிதக்கேடயங்களாகப் பயன்படுத்தி வந்த அகமது சியாமின் ரகசிய இருப்பிடம் குறித்து ஷின் பெட் மற்றும் இராணுவபுலனாய்வு இயக்குநரகம் அளித்த உளவு தகவல்களின் அடிப்படையில் கிவாடி பிரிகேட் படையினரின் வழிகாட்டுதலின் பேரில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேல் பாதுகாப்பு படைஅகமது சியாம் மீது தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு ஹமாஸ் அமைப்பு மறுப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி ஹமாஸ்படைகள் திடீரென இஸ்ரேலுக்குள் தாக்குதல் நடத்தி 1,000 இற்கும் மேற்பட்டோரை கொன்றது.

இதையடுத்து, இஸ்ரேல் இராணுவம் நடத்திய பதிலடி தாக்குதலில் ஆயிரக் கணக்கான குழந்தைகள் உள்ளிட்ட 11 ஆயிரம் பாலஸ்தீனர்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர் என காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில், ஹமாஸ் அமைப்பின் முக்கிய தளபதிகளாக விளங்கிய அலி காதி, முயதாஸ் ஈத், ஜாகாரியா அபு மாமர், ஜோத் அபு ஷ்மலா, பெலால் அல்காத்ரா, மெராட் அபு மெராட் உள்ளிட்டவர்களும் அடங்குகின்றனர்.

# தீபாவளி கொண்டாட்டத்தில் தீ விபத்து: ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பலி!

லண்டனில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு லண்டனில் உள்ள ஹவுன்ஸ்லோவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தீபாவளி கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, அதிகமான பட்டாசுகள் வெடித்ததனால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.




சம்பவத்தில் காயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மரம் நடுவதற்காக கென்யாவில் விசேட விடுமுறை

100 மில்லியன் மரங்களை நடுவதற்காக கென்யாவில் விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளில் 15 பில்லியன் மரங்களை நாட்டும் அரசாங்கத்தின் இலக்கின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தில் ஒவ்வொரு கென்ய பிரஜையும் பங்கேற்பதற்காக விடுமுறை வழங்கப்படுவதாக அந்நாட்டு சுற்றாடல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

100 மில்லியன் மரங்கள் எனும் இலக்கை அடைவதற்காக ஒவ்வொரு பிரஜையும் ஆகக்குறைந்தது இரண்டு மரங்களை நாட்ட வேண்டும்.



# பலாங்கொடை மண்சரிவில் சிக்கிய நான்கு பேரும் சடலங்களாக மீட்பு

பலாங்கொடை – கவரன்ஹேன – வெயின்தென்ன பகுதியில் மண்சரிவில் சிக்குண்டு காணாமல் போயிருந்த நான்கு பேரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், இரண்டு பிள்ளைகள் மண்சரிவில் சிக்கி கடந்த 12 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தனர்.

காணாமல் போனவர்களை தேடும் பணிகளை பொலிஸாரும் , இராணுவத்தினரும் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

இந்தநிலையில், இரண்டாவது நாளாகவும் நேற்று தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், காணாமல் போயிருந்த நால்வரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

# முல்லைத்தீவு நீதிபதிக்காக நியாயம் கேட்டுப் போராடியவர்கள் அவரின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தக் கோரி போராடாதமை ஏன்?

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் கேள்வி






முல்லைத்தீவு நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியமைக்காகப் போராட்டங்கள் செய்தவர்கள் அந்த நீதிபதி வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்திப் போராட்டங்கள் நடத்தினார்களா என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரைஸ்ரீரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மகாவலி அதிகார சபை ஏறாவூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் மயிலத்தமடு – மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறிய குடும்பங்களை வெளியேறுமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த நிலையில் சித்தாண்டியில் போராட்டம் நடத்திய தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் ஏறாவூர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துவார்களா? ஏனெனில் முல்லைத்தீவு நீதிபதி சரவணவராஜா வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு கோரி எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழ் தேசியம் பேசும் சந்தர்ப்பவாதக் கட்சிகள் குரல் எழுப்பியமை கிடையாது.

மாறாக, நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார் எனத் தேர்தலை இலக்குவைத்து நீயா, நானா என்ற போட்டியில் கடையடைப்பு, இரந்து வேண்டுதல், சங்கிலிப்போராட்டம் எனப் பல்வேறு வடிவங்களில. மக்களின் நாளாந்த இயல்பு நிலைகளை குலைக்கும் செயலிலேயே தீவிரம் காட்டி வந்தனர்.

ஆனால், முல்லைத்தீவு நீதிபதி வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துமாறு கோரவில்லை. அதே போன்றே தற்போது மூதூர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைக்கு கொண்டுவருமாறு கோருவார்களா என எண்ணிப் பார்ப்போமானால் பிரச்சினைகள் எப்போதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதே அவர்களது விரும்பம், அவ்வாறான நிலைமை நீடித்தால்தான் தமது அரசியல் பிழைப்பை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதே அவர்களது எண்ணமாக உள்ளது. – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரச்சினை; பின்னணியில் பாரிய சதித்திட்டம்

## தெரிவுக்குழுத் தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க தகவல்

நீண்ட காலமாக பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் பல தரப்பட்ட சதித்திட்டங்களின் விளைவாகவே இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு தற்போதைய நிலைமையை எதிர்நோக்கியுள்ளது என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தெரிவுக்குழுத் தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சதித்திட்டத்தின் பின்னணியில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரத்தைக் கைப்பற்ற சண்டையிடுபவர்களும் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ள தரகர்களும் தேசிய அணியில் தமது இடத்தை உறுதி செய்ய போராடுபவர்களும் இருக்கின்றனர் என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர்கள் சமூக ஊடகங்களை தமது வழிமுறையாகப் பயன்படுத்தி வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய நோக்கங்களுக்காக தேசிய அணியின் இருப்பைச் சீர்குலைக்க முயற்சிப்பவர்களுக்கான பின்புலம் புதிய விளையாட்டுத்துறை அமைச்சரின் நியமனத்தின் பின்னரே ஏற்படுத்தப்பட்டது எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவுக்குழுத் தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தெரிவுக்குழுவிற்கு முன்னைய விளையாட்டுத்துறை அமைச்சர்களின் ஆதரவு இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த 5 வருடங்களில் நாட்டிற்கு வெற்றியைத் தேடித்தரக்கூடிய அணியைத் தயார்ப்படுத்துவதே தெரிவுக் குழுவின் முயற்சியாக இருந்ததாகவும் அதற்காக அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், விளையாட்டுத் துறை அமைச்சரும் அமைச்சும் அதனை நிராகரித்தனர் எனவும் பிரமோத்ய விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் தீர்மானங்களை, அமைச்சின் கீழ் இயங்கிய குழு அங்கீகரிப்பதில்லை என சமூக ஊடகங்களில் அவர்கள் வெளியிடும் கருத்துகளின் ஊடாக வெளிப்பட்டுள்ளதாகவும் இதனூடாக தெரிவுக்குழு தொடர்பில் சமூகத்தில் காணப்பட்ட நம்பிக்கை வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சிரேஷ்ட வீரர்களை அணிக்குள் உள்வாங்காமையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் இவ்வாறு தெரிவுக் குழுவை விமர்சித்துள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலிய சுற்றுப்பயணம் தொடர்பில் வெளியிடப்பட்ட குசல சரோஜினி அறிக்கையின் மூலம் தெரிவுக் குழு கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததாகவும் இரண்டாவது அழுத்தம் நாடாளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகவும் பிரமோத்ய விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

தனிநபர்களின் குறுகிய இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக, தெரிவுக்குழு பலியாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டின் எழுச்சி அல்லது வீழ்ச்சியைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பமே தற்போது உருவாகியுள்ளதாகவும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே தற்போதைய தேவையாகும் எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தெரிவுக்குழுத் தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.



# இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு எதிரான மனுவைப் பரிசீலிக்க நீதியரசர்கள் குழாம்

ஸ்ரீலங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு எதிரான மனுவைப் பரிசீலிக்க நீதியரசர்களான டி. என். சமரகோன் மற்றும் நீல் இத்தவெல ஆகியோரைக் கொண்ட புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் பெயரிடப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் தாக்கல் செய்துள்ள நகர்த்தல் பத்திரத்துக்கமைய, இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் இந்த மனுவின் விசாரணையில் இருந்து விலகிக் கொள்கின்றனர் என்ச் அறிவித்திருந்தனர்.

இந்தநிலையில், புதிய நீதியரசர்கள் குழாம் பெயரிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த மனு எதிர்வரும் 16 ஆம் திகதி புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற குழாம் முன்பாக மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.



# மண்சரிவு அபாய எச்சரிக்கை; 50 ஆயிரம் பேர் வெளியேற்றம்

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும் மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்கும்எனவளிமண்டலவியல்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, தென், வடக்கு, வட மத்திய மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனத் திணைக்களம் கூறியுள்ளது.

இதேவேளை, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, குருணாகல், மாத்தறை ஆகிய 6 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் 14 ஆயிரத்து 225 வீடுகள் மற்றும் கட்டடங்கள் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுமார் 5,000 வீடுகளில் இருந்து மக்கள் அகற்றப்பட்டுள்ளனர் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு அபாயம் மிக்க இடங்களில் இருந்து 50 ஆயிரம் பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர் என நிறுவகத்தின் மண்சரிவு மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட பொறியியலாளரும் புவிச்சரிதவியல் நிபுணருமான லக்சிறி இந்திரஜித் தெரிவித்துள்ளார்.

மாத்தறை, கண்டி, நுவரெலியா, குருணாகல், மாத்தளை, இரத்தினபுரி, களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்களே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியிருந்த 1,685 வீடுகளைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.



# வில்லுப்பாட்டில் யாழ் இந்து அணி தேசிய மட்டத்தில் முதலாம் இடம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித்தினப் போட்டிகள் கொழும்பு விவேகானந்த கல்லூரியில் இடம்பெற்றது.

மாணவர்களுக்கான வில்லுப்பாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது.

பாடசாலை ஆசிரியர்களான திரு. நா.விமலநாதன், திருமதி.ம.செல்வரெட்ணம், திருமதி.வடிவாம்பிகை ஆகியோரின் நெறியாள்கையில் வ.சுபத்திரன்(குரு), கு.பகுஷன்ராஜ் (சீடர்), ஈ.சிவராம்(சீடர்), கோ.தர்மிலன்(ஹார்மோனியம்), ந.ஜனகன்(மிருதங்கம்), கி.திவாகரன் (கடம்), இ.சேந்தன்(உடுக்கு) ஆகிய மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.11.2023




வாழ்வில் முன்னேறுவதற்கு உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமை மற்றும் அமைதி மேற் கொண்டால் எல்லாம் சரியாகி விடும். இன்று சமாளிப்பதில் சற்று சிரமம் காணப்படும்.

பிறருடன் பழகும் போது பொறுமை அவசியம். அமைதியுடன் நடந்து கொண்டால் அவர்க ளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணை விரும்பும் வகையில் நடந்து கொள் வீர்கள்.ஒருவருக்கொருவர் அனுசரனையாக நடந்து கொண்டால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இல்லாவிடி னும் கவலை வேண்டாம். எதிரபாராத பண வரவைக் கொண்டு உங்கள் செலவை சமாளிப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக நீங்கள் இன்று செயல்களை விரைந்து முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் நீண்ட காலப் பயன் தருவனவாக இருக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்களிடம் சிறப்பு தகுதி காணப்படும் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இருவரும் மகிழ்வுடன் காணப்படுவீர்கள். உங்களின் உறவு சிறப்பாக இருக்கும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இதனால் மகிழ்ச்சி ஏற் படும்.

இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாக இருந்தால் கவனமாக செயலாற்றலாம். மகிழ்ச்சிக்கான மந் திரம் இதுவே.

உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி நன்கு திட்டமிட வேண்டும்.இன்று பணிகள் சிறிது அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். செலவும் காணப்படும் என்றாலும் அது பயனுள்ளதாக இருக் கும்.

இன்று நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். தேவையின்றி பதட்டப்பட வேண்டாம். அது உங்கள் ஆரோக்கியத்தை கெடுக் கும்.




நம்பிக்கையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.இதனால் எல்லா விதமான பிரச்சினைகளையும் சமா ளிக்கலாம். உங்கள் மனதை அமைதி யாக வைத்திருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக இருப்ப தாக உணர்வீர்கள். பணிகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி ஆற்றுங்கள். இன்று நேரத்தோடு செயல்பட வேண்டியது அவசியம்.

நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் மேம்படும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய நேரும். என்றாலும் உங்கள் தேவைகளை சமாளிக்கும் வகையில் உங்கள் பணப்புழக்கம் காணப்படும்.

இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.




நேர்மறை எண்ணம் மற்றும் நட்பான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள். இதனால் வெற்றியும் நன்மதிப்பும் கிடைக்கும். எதிர்மறை எண்ணத்தை தவிர்த்திடுங்கள்.

உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும். கவனமின்றி செயல்பட்டால் பணியும் தரம் குறையும். அதன் விளைவாக உங்கள் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையின் அனுசரணை கிடைப்பது இயலாது என்பதனால் நீங்கள் இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். யதார்த்தமான உங்கள் அணுகுமுறை உங்கள் துணையை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

நிதிநிலைமை சற்று மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைக்க வேண்டும். இதன் மூலம் நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.




இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப் படுவீர்கள். பயனுள்ள செயல்களுக்கு அதனை பயன்படுத்துங்கள்.இன்று சௌகரியமாக இருப்பீர்கள்.

உங்கள் பணி இன்று தரமானதாக இருக்கும். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்பட்டு அனைவரின் பாராட்டையும் பெறும்.

சிறந்த தகவல் தொடர்பால் உங்கள் துணை மகிழ்ச்சி யடைவார். உங்கள் இருவருக்குமிடையே மகிழ்ச்சியான இனிமையான தருணங்கள் காணப்படும்.

இன்று கடன்கள் பெற்று உங்கள் பணத் தேவைகளை சமாளிப்பீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று திடமான ஸ்திரமான ஆரோக்கியம் காணப் படும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் பேச்சில் தெளிவு காணப்படும். உங்கள் பேச்சாற்றல் மூலம் சாதிப்பீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் குழப்பம் காரணமாக பணியில் கவனம் செலுத்த இயலாது. சகபணியாளர்க ளுடன் பொறுமையாக பழக வேண்டும். பணியை குறித்தநேரத்தில் முடிப்பதற்கு முன்னுரிமை அளியுங்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ளுங்கள். உங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

நிதிநிலைமையை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். செலவுகளை நிர்வகிக்க தெரிந்துகொண்டு அதிகம் செலவழிக்காமல் இருக்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று சிறப்பாக யோசித்து செயல் பட வேண்டியது அவசியம். தேவையற்ற எண்ணங்களை மனதில் கொள்ளா தீர்கள்.

பணியிடத்தில் இன்று கூடுதல் பொறுப்புகள் காணப்படும். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்வதன் மூலம் அமைதி காணலாம்.

இன்று காதலில் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணை உங்களிடம் புரிந்துணர்வுடன் இருப்பார். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. என்றாலும் உங்களிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு இன்றைய தினத்தை சமாளிக்கலாம்.

உணர்ச்சிவசப்படுதலும் பாதுகாப்பற்ற உணர்வும் தவிர்க்க வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 15.11.2023



தனுசு

ஆரம்பத்தில் சில தடைகள் காணப் படும். உங்களின் தைரியத்தைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் அவசியம். நம்பிக் கையுடன் இருக்க வேண்டும்.

இன்று கவனமாக பணியாற்ற வேண்டும். தேவையற்ற சஞ்சலங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். சிறப்பாக செயலாற்றுங்கள்.

தன்னுடைய விருப்பப்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று உங்கள் துணையின் எதிர்ப்பார்ப்பு காணப்படும். அதற்கு முயன்றால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று அதிக பணம் காணப்படாது. உங்களிடம் இருக்கும் பணம் தேவையை விட அதிகமாக இருக்கும்.

இன்று முன்னெச்சரிக்கையாக உங்கள் கண்களுக்கும் பல்லிற்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.



கும்பம்

இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால் பதட்டம் காணப்பட்டாலும் உங்களிடம் மகிழ்ச்சியும் காணப்படும். விருப்பமான வெளியிடங்களுக்கு செல்வது ஆறுதலைத் தரும்.

நம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்த சவால்களையும் எதிர் கொள்ளும் மன நிலை உருவாகும். அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையின் உதவியுடன் விரைந்து முடிவெடுக்க விரும்புவீர்கள். நல்ல தொடர்பு காணப்படும். முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இசை கேட்டல் மற்றும் பிரார்த்தனை நல்ல மனநிலையை அளிக்கும்.



மகரம்


இன்று அனைத்தும் சிறப்பாக நடக்கும். வாழ்வில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத விதமாக இன்று உங்களுக்கு பண வரவு அதிகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான பிணைப்பு முன்பிருந்ததை விட இப்பொழுது அதிகமாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். உங்களின் பணம் சம்பாதிக்கும் திறன் இன்று அதிகரித்தும் பக்குவப்பட்ட நிலையிலும் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.



மீனம்

ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடுவீர்கள். இது வெற்றியை அளிக்கும். பிரார்த்தனை மூலம் மன அமைதி பெறுவீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். பணியில் கவனம் செலுத்தினால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் உறவின் தரத்தை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். வேறுபாடுகளைக் களைந்து புரிந்துணர்வுடன் செயல்பட்டால் நல்லுறவை ஏற்படுத்த முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். குறைவாக செலவழிக்க வேண்டும். சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.

குளிர்ச்சியான உணவு வகைகள் காரணமாக ஒவ்வாமை ஏற்படும் என்பதால் உணவு மற்றும் நீரில் கவனம் தேவை.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park




# உலகக் கிண்ணக் கிரிக்கெட் முதல் அரையிறுதி இந்தியா - நியூஸிலாந்து இன்று மோதல்!

## மழையால் போட்டி தடைப்பட்டால் மறுநாள் நடைபெறும்

## மொத்த பரிசுத்தொகை 325 கோடி ரூபா என அறிவிப்பு

இந்தியாவில் நடைபெற்று வரும் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தத் தொடரின் லீக் சுற்று ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இந்நிலையில், இன்று மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதியாட்டத்தில் புள்ளிப்பட்டியலில் முதலிடம் பிடித்த இந்திய அணியும், நான்காவது இடம் பிடித்த நியூஸிலாந்து அணியும் மோதவுள்ளன.

லீக் சுற்றில் தோல்வியே சந்திக்காத இந்திய அணி இன்று நடைபெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறும் முனைப்பில் உள்ளது.

அதேவேளை, லீக் சுற்றில் இந்தியாவிடம் தோல்வியடைந்த நியூஸிலாந்து அணி இந்திய அணியை வீழ்த்தி தொடர்ந்து 3ஆவது முறையாக உலகக் கிண்ண இறுதிப்போட்டிக்கு முன்னேறும் முனைப்பில் உள்ளது.

2019ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண அரையிறுதியாட்டத்தில் நியூஸிலாந்திடம் தோல்வியடைந்து வெளியேறிய இந்திய அணி இந்த முறை அதற்குப் பழிதீர்க்கும் முனைப்புடன் உள்ளது. இதனால் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

இதேவேளை, கொல்கத்தாவில் நாளை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் அவுஸ்திரேலியா–தென்னாபிரிக்கா மோதவுள்ளன.

இந்நிலையில், அரையிறுதியாட்டங்கள் மற்றும் இறுதியாட்டம் என்பன மழையால் தடைப்பட்டால் அடுத்து வரும் நாட்களில் போட்டிகள் நடைபெறும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

மேலும் இந்தத் தொடரின் மொத்தப் பரிசுத்தொகை 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 325 கோடி ரூபா) என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சம்பியன் அணிக்கு 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்படும் எனவும், இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

